


சென்னை ஜெயா கல்வி குழும பொறியியல் கல்லூரி முன்னாள் மாணவர்களின் சந்திப்பு நிகழ்ச்சியில் சி.இ.ஜி. முன்னாள் மாணவர் சங்க தலைவர் இ.பி.கருணாகரனுக்கு நினைவு பரிசை கல்வி குழும தலைவர் அ.கனகராஜ் வழங்கினார். உடன் கல்வி குழும பொறியியல் கல்லூரிகளின் முதல்வர்கள் விஜயராகவன், கணேசன், நெடுஞ்செழியன், உதயகுமார், முன்னாள் முதல்வர் கந்தசாமி.

# ஜெயா பொறியியல் கல்வி குழுமத்தில்

# முன்னாள் மாணவர்கள் சந்திப்ப

திருவள்ளூர், ஜன. 30-
ஜெயா பொறியியல் கல்லூரியில் முன்னாள் மாணவர்களின் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதற்கு ஜெயா கல்வி குழுமத்தின் தலைவர் பேராசிரியர் அ.கனகராஜ் தலைமை வகித்தார். செயலாளர் க.விஜயகுமாரி, துணைத் தலைவர் க.நவராஜ் முன்னிலை வகித்தனர். முன்னாள் மாணவர் மன்ற தலைவர் ஹரிஷ் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் இ.பி.கருணாகரன் பேசுகையில், ‘கல்லூரியில் முன்னாள் மாணவர்களின் பங்கு, கல்லூரியின் வளர்ச்சி மற்றும் மாணவர்களுக்கு எல்லாவிதத்திலும் உதவியாக இருக்க வேண்டும்‘ என்றார். விழாவில் சிறந்த முன்னாள் மாணவர்களுக்கும் சிறப்புஅழைப்பாளர்களுக்கும் பரிசு வழங்கி கல்லூரி குழுமத்தின் தலைவர் கனகராஜ் பேசும் போது, ‘மாணவர்களுக்கும் கல்லூரிகளுக்கும் இடையிலான உறவு என்றும் தொடரும் என்றும் அவர்களுக்காக கல்லூரியின் கதவுகள் என்றும் திறந்தே இருக்கும்‘ என்றார்.

இதில், ஜெயா கல்வி குழும பொறியியல் கல்லூரிகளின் முதல்வர்கள் விஜயராகவன், கணேசன், நெடுஞ்செழியன், உதயகுமார். முன்னாள் முதல்வர் கந்தசாமி கலந்துகொண்டனர். நாகராஜன் நன்றி கூறினார்.